**உதவி அமர்வு நீதிமன்றம்/சார்பு நீதிமன்றம், பத்மநாபபுரம்**

**முன்னிலை: திரு. K. மாரியப்பன், பி.ஏ., பி.எல்.,**

**உதவி அமர்வு நீதிபதி/சார்பு நீதிபதி, பத்மநாபபுரம்**

**2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் புதன்கிழமை**

**அமர்வு வழக்கு எண்.57/2023**

**CNR- TNKK07-00107-2023**

| | | |
|---|---|---|
| தமிழக அரசுக்காக | : | காவல் ஆய்வாளர்,<br>தக்கலை காவல் நிலையம்.<br>குற்ற எண்.613/2014 |
| எதிரியின் பெயர் | : | செல்வன் (எ) செல்வன் ராபர்ட்<br>த.பெ. வர்க்கீஸ்<br>பூலான்தோட்டவிளை<br>பழையகடை<br>பள்ளியாடி |
| அரசு தரப்பில் எதிரியின் மீது முறையிடப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | அரசுத்தரப்பில் எதிரி மீது இ.த.ச பிரிவுகள். 341,294(பி), 427, 307,387, 506(2) ன் படி குற்றம் முறையிடப்பட்டுள்ளது. |
| எதிரியின் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | எதிரி மீது இ.த.ச பிரிவுகள். 341, 294(பி), 427, 307,387, 506(2) ன் படி குற்றச்சாட்டுகள் வனையப்பட்டது |
| நீதிபதியின் முடிவு | : | எதிரி மீது இ.த.ச பிரிவுகள். 341,294(பி), 427, 307,387, 506(2)ன் படி குற்றவாளி இல்லை. |
| தீர்ப்புரை | : | எதிரி மீது இ.த.ச பிரிவுகள். 341,294(பி), 427, 307,387, 506(2)ன் படி குற்றவாளி அல்ல என முடிவு செய்யப்பட்டு எதிரியை கு. வி. மு. ச. பிரிவு. 235 (1) படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |

இவ்வழக்கில் ஆர்.பி. எண்3/2025–ல் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ள சா.பொ.1 முறுக்கு கம்பி மேல் முறையீடு அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த வழக்கு என் முன்பு 11.03.2026 தேதியன்று இறுதியான விசாரணைக்கு வந்த போது குற்றமுறையிடுபவர் தரப்பில் கூடுதல் அரசு குற்றத்துறை வழக்குரைஞர் திரு. T. மைக்கேல் ரதீஸ் அவர்கள் ஆஜராகியும், எதிரி சார்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. பி.வி. மகேஷ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், அரசு தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்த வழக்கு எனது பரிசீலனையின் கீழ் இருந்து வந்தபின் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

**<u>தீர்ப்புரை</u>**

சாட்சி 1 விஜின் பள்ளியாடி சிங்காராயன் மகன் ரவி (எ) அக்கிரனும் நண்பர்கள் என்றும் சாட்சி 1 விஜின் , ரவி (எ) அக்கிரனுக்கு உதவி செய்வதாக எதிரி செல்வன் (எ) செல்வன் ராபர்ட் என்பவருக்கு சாட்சி 1ன் மீது கோபம் இருந்தது என்றும், கடந்த 27.07.2014ம் தேதி காலை 10.30 மணிக்கு சாட்சி 1 விஜின் பள்ளியாடி எல்எம்எஸ் கோயில் பக்கம் உள்ள இறைச்சிகடையில் நிற்கும் போது எதிரி செல்வன் சாட்சி 1 ஐ பார்த்து புண்டாமோனே அக்கிரன் என்ற ரவிக்கு சப்போர்ட்டா செய்கிறாய் என்று கெட்ட வார்த்தைகள் பேசி அவமானமும் அருவருப்பும் உண்டு பண்ணி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மரண பயம் உண்டு பணனி சென்றான். பின்னர் 08.08.2014ம் தேதி மதியம் 12.30 மணியளவில் சாட்சி 1 விஜின் இவருக்கு செர்ந்தமான TN 75 K 9648 ஸ்கூட்டியில் குழிக்கோட்டிற்கு செல்ல பள்ளியாடி சேரிக்கடை குருசடி பக்கம்

செல்லும் போது எதிரி செல்வன் ஒரு இரும்பு கம்பியுடன் வந்து சாட்சி 1 ஐ தடுத்து நிறுத்தி புண்டாமகனே தேவடியாமகனே நீ என்து எதிரி அக்கிரன் (எ) ரவிக்கு சப்போட்டா செய்கிறாய் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கையில் இருந்த கம்பியால் இதோடு செத்து தெலைந்து போ என்று சாட்சி 1ன் தலையில் ஓங்கி அடிக்கவே சாட்சி 1 தலையை திருப்பியதால் அந்த அடி தலையில் படாமல் சாட்சி 1ன் இரு சக்கர வாகனத்தில் முன இடது பக்க சைடு கண்ணாடி கிளாசில் பட்டு உடைந்தது. எதிரி அதே கம்பியால் மேலும் இரு சக்கர வாகனத்தை பம்பரில் அடித்து சேதப்படுத்தினான் என்றும் விஜின் சத்தம் போடவே எதிரி சாட்சி 1ன் இடது பக்க சட்டை பாக்கெட்டில் இருந்த ரூ.500/– யை பிடுங்கி பறித்து எடுத்துக்கொண்டு சாட்சி 1 ஐ பார்த்து இன்று தப்பிவிட்டாய் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மரணபயத்தை உண்டு பண்ணிய குற்றத்திற்காக எதிரி மீது இ.த.ச பிரிவுகள். 341,294(பி), 427, 307,387, 506(2) ன் படி குலசேகரம் காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி குற்ற இறுதி அறிக்கையை முதலில் பரிசீலனை செய்த பத்மனாபபுரம் நீதித்துறை நடுவர், மேற்படி குற்ற இறுதி அறிக்கையை முதல் விசாரணை பதிவேட்டு வழக்கு எண். 74/2022 என கோப்பிற்கு எடுத்து, இவ்வழக்கின் எதிரிக்கு இவ்வழக்கின் ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கி பின்னர் இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்து எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களானது அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கத்தக்க குற்றம் என்பதால் இவ்வழக்கினை மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கன்னியாகுமரி மாவட்டம் (இருப்பு) நாகர்கோவிலுக்கு கு.வி.மு.ச.209(அ) பிரிவின் கீழ் விசாரணைக்காக சமர்ப்பித்துள்ளார்.

3. மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி, கன்னியாகுமரி மாவட்டம் (இருப்பு) நாகர்கோவில், நீதிமன்றத்தில் இவ்வழக்கானது அமர்வு வழக்கு

எண் 57/2023 என கோப்புக்கு எடுக்கப்பட்டு மேல் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

4. இந்நீதிமன்றத்தில் எதிரி ஆஜரான போது இருதரப்புகளை கேட்டும், அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்தும், எதிரி குற்ற இறுதி அறிக்கையில் கண்டுள்ள குற்றங்களை புரிந்திருக்க கூடும் என்று அனுமானிக்க முதல் நிலையில் ஆதாரங்கள் இருந்ததால் எதிரி மீது இ.த.ச பிரிவுகள். 341,294(பி), 427, 307,387, 506(2) ன் படி குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு அதை விளக்கி கூறி வினவிய போது எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்தார். எனவே இவ்வழக்கு அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

5. இவ்வழக்கில் அரசு தரப்பில் 1 முதல் 9 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் 1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. (*** அ.சா.ஆ–2, அ.சா.ஆ–3 குறியீடு செய்யவில்லை)

6. **<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு</u>**

அ.சா.8 பாரத்லிங்கம் தனது சாட்சியத்தில். கடந்த 08.08.2014ம் தேதி தான் தக்கலை காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றிய போது மதியம் 14.00 மணிக்கு திரு. விஜின் த/பெ. லாசர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மை படி நிலைய குற்ற எண்.613/2014 பிரிவுகள் 341 294(பி), 307, 387, 506(2) , 427, இ.த.ச மற்றும் 3(1) TNPPDL Act படி வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல்அறிக்கை அ.சா.ஆ.4 அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டு ஒரு நகலை காவல் ஆய்வாளர் அவாகளின் பார்வைக்கு வைத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

7. ஹரிகிருஷ்ணன் தனது சாட்சியத்தில், தான் இதற்கு முன்னர் 08.08.2014ம் தேதி தக்கலை வட்ட காவல் ஆய்வாளராக பணியாற்றிய போது அன்றைய தினம் தக்கலை காவல் உதவி ஆய்வாளர்திரு. பரத்லிங்கம் பதிவு செய்த தக்கலை காவல்நிலைய குற்ற எண். 613/2014 பிரிவுகள் 341, 294(பி), 307, 387, 506(2), 427 இ.த.ச மற்றும் பிரிவு 3 (1) தமிழ்நாடு பொதுசொத்துக்களை சேதப்படுத்துவதை தடை செய்யும் சட்டபடியான வழக்கை 08.08.2014ம் தேதி 15.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சுஜின், பிபின்ராஜ் ஆகியவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.5, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6. பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் 16.30 மணிக்கு உடைந்து சேதமடைந்த இருசக்கர வாகனத்தின் பம்பர் ஒன்றை அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.7. சாட்சிகள் விஜின், சேகர், பேபி, செல்வன், தங்கையன், சுஜின், பிபின்ராஜ் ஆகியவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் 09.09.2014ம் தேதி காலை 11.00 மணிக்கு பள்ளியாடி பழையக்கடையில் வைத்து எதிரியை கைது செய்து சாட்சிகள் தேவஊவு, கனகராஜ் ஆகியவர்களை விசாரித்ததாகவும், எதிரி தானாக முன் வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் அந்த ஒப்புதல்வாக்குமூலத்தில் வாதியிடம் அளித்த ரூ.200/-ஐ அவரிடமிருந்து ஒப்படைப்பதாக தெரிவித்ததாகவும் அவரிடமிருந்து முறுக்கு கம்பி ஒன்றை கைப்பற்றியதாகவும் அந்த அத்தாட்சி அ.சா.ஆ.8. முறுக்கு கம்பி சா.பொ.1. அதே சாட்சிகள் முன்னிலையில் காலை 11.00 மணிக்கு எதிரி எடுத்து ஆஜர் செய்த இரண்டு ரூ.100/- நோட்டுகளை அத்தாட்சி மூலம் தயார் செய்து கைப்பற்றியதாகவும் பின்னர் ஆஜர் எதிரிகளையும், கைப்பற்றப்பட்ட சொத்துக்களையும் நீதிமன்றம் முன்பு ஆஜர்படுத்த வேண்டுகோள் மூலம் உரிய வழிகாவல் மூலம் அனுப்பி வைத்ததாகவும் பின்னர் சாட்சிகள் தேவஊவு, கனகராஜ் ஆகியவர்களை 14.01.2015ம் தேதி விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் பின்னர் சாட்சிகளை விசாரித்ததிலிருந்தும்,

என்னுடைய விசாரணையின் மீதும் எதிரியின் மீதான குற்றம் உண்மை என்று தெரிய வந்ததால் ஆஜர் எதிரி மீது 14.01.2015ம் தேதி 341, 294(பி), 427, 307, 387, 506(2) இ.த.ச படி இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

8. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு எதிரான சங்கதிகள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1) (அ)–ன் கீழ் வினவியபோது எதிரி சாட்சிகளின் சாட்சியங்களை மறுத்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

9. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இந்நீதிமன்றத்தில் எதிரி மீது இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

10. ***<u>பிரச்சனைக்கான தீர்வு</u>*** ?.

அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தின் போது, எதிரி இ.த.ச பிரிவுகள். 341,294(பி), 427, 307,387, 506(2) ன் படி குற்றச்சாட்டுகள் அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எதிரிக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

11. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தின் போது, எதிரி மீதான குற்றச்சாட்டுகள் எதுவும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும் எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

12. இருதரப்பு வாதங்கள், வழக்கு ஆவணங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

13. அரசுத் தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க அ.சா.1 முதல் அ.சா.9 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். புகார்தாரர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், எதிரியுடன் தற்போது சமாதானமாக சென்று விட்டதாகவும் எதிரிக்கு எதிராக சாட்சியம் அளிக்க விரும்பவில்லை என்றும் புகார் கொடுத்தது தான் தான் என்றும், அந்த புகார் அ.சா.ஆ–1 எனறு சாட்சியமளித்துள்ளார். நேரில் பார்த்த சாட்சிகளான அ.சா.2 முதல் 4 தங்களது சாட்சியத்தில், எதிரியை தெரியாது என்றும் சம்பவம் பற்றி தங்களுக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்கள். பார்வை மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான அ.சா.5,6,7 தங்களது சாட்சியத்தில் பார்வைமகஜர் மற்றும் ஒப்புதல்வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தங்களுடையது இல்லை என்று சாட்சியமளித்துள்ளார்கள். எதிரி சாட்சி 1 ஐ தடுத்து நிறுத்தி அசிங்கமாக பேசி இடது பக்க சட்டை பாக்கெட்டில் இருந்த ரூ.500/– யை பிடுங்கி பறித்து எடுத்துக்கொண்டு சாட்சி 1 ஐ பார்த்து இன்று தப்பிவிட்டாய் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மரணபயத்தை உண்டு பண்ணியதாக அரசு தரப்பு வழக்கு. ஆனால் அ.சா.1 முதல் 4 வரையிலான சாட்சிகள் தங்களுடைய சாட்சியத்தில், அவ்வாறு எதிரி சாட்சி 1 ஐ தடுத்து நிறுத்தி அசிங்கமாக பேசி இடது பக்க சட்டை பாக்கெட்டில் இருந்த ரூ.500/– யை பிடுங்கி பறித்து எடுத்துக்கொண்டு சாட்சி 1 ஐ பார்த்து இன்று தப்பிவிட்டாய் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மரணபயத்தை உண்டு பண்ணியதாக சாட்சியத்தை முன்னிடவில்லை. அரசு தரப்பு குறுக்கு விசாரணையின் போது அ.சா.1 முதல் அ.சா.3 சம்பவத்தில் எதிரி ஈடுபட்டதாக கேட்கப்பட்ட கேள்வியை மறுத்து சாட்சியத்தை முன்னிட்டுள்ளார்கள். அ.சா.1

முதல் அ.சா.7 அரசு தரப்பு வழக்கிற்கு ஆதவாக சாட்சியம் எதையும் அளிக்காமல் பிறழ்சாட்சியாக்கப்பட்டுள்ளார்கள்.

14. மேலும் அரசு தரப்பில் வழக்கு சம்பவத்தில் எதிரியை தொடர்புபடுத்தி கூறக் கூடிய எந்தவொரு சாட்சியமும் இல்லை. எனவே இந்த வழக்கில் எதிரி அரசு தரப்பில் சொல்லப்பட்டுள்ளதை போல குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார் எனக் கூறுவதற்கு எந்த விதமான கண்ணுற்ற சாட்சியமும் இல்லை. அவ்வாறான நிலையில் புலன் விசாரணை அதிகாரிகளான அ.சா.8, 9, ன் சாட்சியம் அரசுத் தரப்பு வழக்கை மேம்படுத்துவதாகவோ அரசு தரப்பில் சொல்லப்படுவதை போல வழக்கு சம்பவத்தில் எதிரி ஈடுபட்டார் என்பதை நிரூபிக்கக் கூடியதாகவோ அமையாது.

15. எனவே இந்த வழக்கில் வழக்கு சம்பவத்தில் எதிரி ஈடுபட்டுள்ளார் என்பதை நிரூபிக்கக் கூடிய சாட்சியங்கள் எதுவும் இல்லை என்பதால் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, எதிரி மீது இ.த.ச பிரிவுகள். 341,294(பி), 427, 307,387, 506(2) படியான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் ஆர்.பி. எண்3/2025–ல் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ள சா.பொ.1 முறுக்கு கம்பி மேல் முறையீடு அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளரிடம் சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K MARIAPPAN
Digitally signed by K MARIAPPAN
Date: 2026.04.02 12:01:54 +0530

உதவி அமர்வு நீதிபதி/சார்பு நீதிபதி

பத்மனாபபுரம்

**இணைப்பு:–**

**அரசு தரப்பு சாட்சிகள் :–**

1) அ.சா.1 – திரு. விஜின்

2) அ.சா.2 – திரு. சேகர்

3) அ.சா.3 – திரு.டேவி

4) அ.சா.4 – திரு.செல்வன்

5) அ.சா.5 – திரு. சுஜின்

6 அ.சா.6 – திரு. பிபின்ராஜ்

7) அ.சா.7 – திரு. கனகராஜ்

8) அ.சா.8 – திரு.பாரத்லிங்கம்

9) அ.சா.9 – திரு. ஹிரிகிருஷ்ணன்

**அரசு தரப்பு சான்றாவணங்கள் ;**

1. அ.சா.ஆ.1 – புகார்

2. அ.சா.ஆ.2 – ***

3. அ.சா.ஆ.3 – ***

4. அ.சா.ஆ.4 – முதல் தகவல் அறிக்கை

5. அ.சா.ஆ.5 – பார்வை மகஜர்

6. அ.சா.ஆ.6 – வரைபடம்

7. அ.சா.ஆ.7 – அத்தாட்சி

8. அ.சா.ஆ.8 . அத்தாட்சி

(*** அ.சா.ஆ–2, அ.சா.ஆ–3 குறியீடு செய்யவில்லை)

**அரசு தரப்பு சான்று பொருள்கள்**

சா.பொ.1 – முறுக்கு கம்பி,

**எதிரி தரப்பு சாட்சிகள்**

– இல்லை –

**எதிரி தரப்பு சான்றாவணங்கள்;**

– இல்லை –

K MARIAPPAN Digitally signed by K MARIAPPAN Date: 2026.04.02 12:02:03 +0530

உதவி அமர்வு நீதிபதி/சார்பு நீதிபதி,

பத்மனாபபுரம்